## November 22, 2025 – தினமணி செய்தித்தாள் சிறுதுணுக்கள்

1. துபை விமனக் கண்காட்சியில் வான் சாகசத்தில் ஈடுபட்ட இந்தியாவின் தேஜஸ் போர் விமானம் திடீரென விழுந்து நொறுங்கியது. இதில், விமானத்தை இயக்கிய ஹிமாசல பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த விங் கமாண்டர் நமான்ஷ் சயால் (37) உயிரிழந்தார்.
    i. நவம்பர் 17-ஆம் தேதி தொடங்கிய இந்தக் கண்காட்சியில் 150-க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்றுள்ளன. இதில், இந்தியாவின் தேஜஸ் போர் விமானம், சூரியகிரண் வான் சாகச குழுவினரின் சாகசங்கள் நடைபெற்றன. வெள்ளிக்கிழமை மதியம் சாகசத்தில் ஈடுபட்ட தேஜஸ் போர் விமானம் மிகவும் தாழ்வாகப் பறந்து மேலே எழும்ப முற்பட்டபோது திடீரென தரையில் விழுந்து நொறுங்கியது.
    ii. 1984-இல் உள்நாட்டில் தேஜஸ் போர் விமானம் உருவாக்கத் திட்டம் தொடங்கப்பட்டது. 2016-இல் விமானப் படையில் இணைக்கப்பட்டது.
    iii. கடந்த 2021, பிப்ரவரியில் ரூ.48,000 கோடியில் 83 தேஜஸ் எம்கே-1ஏ போர் விமானங்களைக் கொள்முதல் செய்ய ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்துடன் பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம் மேற்கொண்டது. 2023-இல் மேலும் 97 தேஜஸ் போர் விமானங்களை வாங்கவும் பூர்வாங்க அனுமதி அளிக்கப்பட்டது.
2. கருப்பை வாய் புற்றுநோயைக் கண்டறிவதற்காக மருத்துவமனைகளுக்குச் செல்ல பெரும்பாலான பெண்கள் தயக்கம் காட்டுவதால், சுகாதாரப் பணியாளர்கள் மூலம் வீடுகளுக்கே சென்று அவர்களுக்கு சுய பரிசோ தனை உபகரணங்களை வழங்க மக்கள் நல்வாழ்வுத் துறை முடிவு செய்துள்ளது.
    i. சோதனை முயற்சியாக தருமபுரியில் 35 வயதுக்குள்பட்ட 25 ஆயிரம் பெண்களுக்கு அந்த உபகரணங்களை வழங்க உள்ளதாக தேசிய நலவாழ்வுக் குழுமம் தெரிவித்துள்ளது.
    ii. ஹியூமன் பாப்பிலோமா வைரஸ் (ஹெச்பிவி) எனப்படும் கிருமித் தொற்று காரணமாக கருப்பைவாய் புற்றுநோய் ஏற்படுகிறது. இந்நோயால் பாதிக்கப் பட்டவர்களின் கருப்பைவாயின் உயிரணுக்களில் புற்று செல்கள் பரவி, அதன் திசுக்களைப் பாதிக்கும். உரிய நேரத்தில் கண்டறிந்து சிகிச்சை பெறாவிட்டால், நுரையீரல், கல்லீரல், சிறுநீர்ப்பை, மலக்குடல் உள்ளிட்ட பிற உறுப்புகளுக்குப் பரவ வாய்ப்புள்ளது.
    iii. அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி மைய தரவுகளின்படி, தமிழகத்திலேயே தருமபுரி மற்றும் பெரம்பலூரில்தான் கருப்பை வாய் புற்றுநோய் அதிகமாக காணப்படுகிறது. அதாவது, லட்சத்தில் 36 பெண்களுக்கு அத்தகைய பாதிப்பு அந்த மாவட்டங்களில் ஏற்படுகிறது. அதற்கு அடுத்தபடியாக அந்த விகிதம் அரியலூரில் 29.9-ஆக உள்ளது. சென்னையைப் பொருத்தவரை 13-ஆகவும், தமிழகத்தின் மொத்த கருப்பைவாய் புற்றுநோய் பாதிப்பு விகிதம் லட்சத்துக்கு 14-ஆகவும் உள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.
    iv. இந்த சூழலில் அதற்கான பரிசோதனையை பெண்கள் மேற்கொள்ள வேண்டும் என அரசு சார்பில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆனால், மருத்துவமனைகளுக்குச் சென்று பிறப்புறுப்பு திரவ மாதிரியை சோதிக்கும் (வெஜினல் ஸ்வாப்) பரிசோதனையை மேற்கொள்ள பெண்கள் பலர் தயக்கம் காட்டுகின்றனர்.
3. இந்தியாவின் எட்டு முக்கிய உள்கட்டமைப்புத் துறைகளின் உற்பத்தி வளர்ச்சி கடந்த அக்டோபரில் பூஜ்ஜியம் சதவீதமாகப் பதிவாகியுள்ளது.
    i. இது குறித்து வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
    ii. நிலக்கரி, மின்சாரம், உற்பத்தி, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, சிமெண்ட், உருக்கு, பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆகிய நாட்டின் எட்டு முக்கிய உள்கட்டமைப்புத் துறைகளில் வளர்ச்சி கடந்த அக்டோபர் மாதம் பூஜ்ஜியம் சதவீதமாகப் பதிவாகியுள்ளது.
    iii. நிலக்கரி மற்றும் மின்சார உற்பத்தியில் ஏற்பட்ட சரிவால் இந்த நிலை ஏற்பட்டது. கடந்த ஓர் ஆண்டில் முக்கிய உள்கட்டமைப்புத் துறைகளின் வளர்ச்சி முதல்முறையாக பூஜ்ஜியமாகப் பதிவாகியுள்ளது.
4. உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் வெள்ளிக்கிழமை (நவ.21) ஓய்வு பெற்றார்.
    i. உச்சநீதிமன்றத்தின் 52-ஆவது தலைமை நீதிபதியாக கடந்த மே 14-ஆம் தேதி பி.ஆர்.கவாய் பதவியேற்றார்.
    ii. உச்சநீதிமன்றத்தில் பட்டியலினத்தைச் சேர்ந்த முதல் தலைமை நீதிபதியாக கே.ஜி.பாலகிருஷ்ணன் பதவி வகித்தார். அவரைத் தொடர்ந்து பட்டியலினத்தைச் சேர்ந்த 2-ஆவது தலைமை நீதிபதியாக பி.ஆர்.கவாய் பதவியேற்றார். பௌத்த மதத்தைச் சேர்ந்த முதல் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி என்ற பெருமையையும் அவர் பெற்றார்.
    iii. உச்சநீதிமன்றத்தின் அடுத்த தலைமை நீதிபதியாக சூர்ய காந்த் திங்கள்கிழமை (நவ.24) பதவியேற்க உள்ளார். 2027-ஆம் ஆண்டு பிப்.9 வரை அவர் அப்பதவியில் நீடிப்பார்.
    iv. சூர்ய காந்த் பதவியேற்பு நிகழ்ச்சியில் இலங்கை, பூடான், மலேசியா, மோரீஷஸ், நேபாள நாடுகளின் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதிகள் மற்றும் நீதிபதிகள் பங்கேற்க உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இந்திய உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஒருவரின் பதவியேற்பு நிகழ்ச்சியில்

வெளிநாட்டு நீதித்துறையைச் சேர்ந்தவர்கள் அதிக அளவில் பங்கேற்க உள்ளது இதுவே முதல்முறை என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

5. ரஷியாவுடனான போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அமெரிக்காவின் திட்டம் தொடர்பாக அந்த நாட்டுடன் இணைந்து செயல்படத் தயார் என்று உக்ரைன் அதிபர் வொலோ திமீர் ஸெலென்ஸ்கி தெரிவித்தார்.
    i. அமெரிக்க அதிபர் மாளிகை சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்காஃப் மற்றும் ரஷிய தூதர் கிரில் டிமித்ரியேவ் இடையிலான சந்திப்புகளுக்குப் பிறகு உருவாக்கப்பட்ட அந்த வரைவுத் திட்டத்தில், உக்ரைன் இன்னும் கட்டுப்படுத்தும் டொனட்ஸ்க் பகுதியின் பெரும் பகுதியை விட்டுக் கொடுக்க வேண்டும், ராணுவத்தை 6 லட்சமாகக் குறைக்க வேண்டும், நேட்டோவில் சேர மாட்டோம் என்று உறுதியளிக்க வேண்டும் என்பவை போன்ற அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.
    ii. இவை அனைத்தும் ஏற்க முடியாதவை என்று உக்ரைன் நிராகரித்து.

6. ஜி20 உச்சி மாநாட்டில் பங்கேற்க பிரதமர் நரேந்திர மோடி 3 நாள்கள் அரசுமுறைப் பயணமாக தென்னாப்பிரிக்காவுக்கு சென்றடைந்தார்.
    i. 'வசுதைவ குடும்பகம்' (உலகமே ஒரு குடும்பம்) மற்றும் ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம் எனும் தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப இந்தியாவின் கண்ணோட்டத்தை இந்த மாநாட்டில் முன்வைப்பேன் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.
    ii. அமெரிக்கா, ரஷியா, பிரிட்டன், ஜப்பான், இந்தியா உள்பட வளரும்- வளர்ந்த நாடுகளை உள்ளடக்கிய ஜி20 கூட்டமைப்பின் உச்சி மாநாடு, தென்னாப்பிரிக்காவின் ஜோஹன்னஸ்பர்க் நகரில் இருநாள்கள் நடைபெற வுள்ளது. ஆப்பிரிக்க கண்டத்தில் ஜி20 உச்சிமாநாடு நடைபெறுவது இது முதல் முறையாகும்.

7. தில்லி காவல் துறை ஆபரேஷன் 'சைஹாக்' நடவடிக்கையின் கீழ் இணையவழி சைபர் மோசடிகளுக்கு எதிரான 48 மணி நேர நடவடிக்கையின் போது 4,400-க்கும் மேற்பட்ட சந்தேக நபர்கள் சுற்றிவளைக்கப்பட்டு 877 பேர் கைது செய்யப்பட்டன.

8. நான்கு தொழிலாளர் சட்டங்கள் அமலுக்கு வந்ததாக மத்திய அரசு அறிவித்தது.
    i. நடப்பில் இருந்த 29 தொழிலாளர் சட்டங்களில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு ஊதிய விதி, 2019, தொழில் துறை தொடர்பு விதி, 2020, சமூகப் பாதுகாப்பு விதி, 2020 மற்றும் பணிப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணிச்சூழல் விதி, 2020 ஆகிய நான்கு சட்டங்களாக சுருக்கப்பட்டன. இந்தச் சட்டங்களுக்கு வெள்ளிக்கிழமை முதல் (நவ.19, 2025) அமலுக்கு வந்தது.
    ii. இதில் முதல்முறையாக உணவு விநியோகம் உள்ளிட்ட துறைகளில் தற்காலிக பணிகளான 'கிக் தொழில்', 'பிளாட்பார்ம் தொழில்' மற்றும் 'அக்ரகேட்டார்' (இணையவழி விநியோக நிறுவனம்) பணிகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

**முக்கிய அம்சங்கள்**

- i. அனைத்து தொழிலாளர்களுக்கும் பணி நியமன ஆணை வழங்குவது கட்டாயம்.
- ii. ஐடி ஊழியர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 7-ஆம் தேதிக்குள் ஊதியம் வழங்குவது கட்டாயம்.
- iii. கூடுதல் பணி நேரத்துக்கு இருமடங்கு ஊதியம்.
- iv. நிரந்தர தொழிலாளர்களுக்கு நிகராக ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும் விடுமுறை, மருத்துவ மற்றும் சமூகப் பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து சலுகைகளும் நீட்டிப்பு.
- v. ஆதார் இணைப்புடன் கூடிய ஒற்றைக் கணக்கு எண் அறிமுகம்.
- vi. மின்னணு ஊடகத்தில் பணிபுரியும் பத்திரிகையாளர்கள், டப்பிங் மற்றும் சண்டைப் பயிற்சிக் கலைஞர்கள் உள்பட எண்ம மற்றும் ஒலி-ஒளி சார்ந்த தொழில்களில் ஈடுபடுபவர்களுக்கும் அனைத்து சலுகைகளும் நீட்டிப்பு.
- vii. அனைத்து வகையான பணிகளிலும் பெண்கள் இரவில் பணிபுரிய அனுமதி.
- viii. பாலின பாகுபாடின்றி சமவேலைக்கு சமஊதியம்.
- ix. 40 வயதுக்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும் இலவச மருத்துவ பரிசோதனை.
- x. உரிமம் பெற ஒற்றைப் பதிவு முறை அறிமுகம்.
- xi. சமூகப் பாதுகாப்பு விதி, 2020- இன்கீழ் 'கிக் பணியாளர்கள்', 'பிளாட்பார்ம் பணியாளர்கள்' (தற்காலிக ஒப்பந்தப் பணியாளர்கள்) உள்பட அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வருங்கால வைப்பு நிதி (பிஎஃப்), காப்பீடு, ஊழியர் காப்பீட்டு நிறுவன (இஎஸ்ஐசி) சலுகைகள் நீட்டிப்பு.
- xii. ஊதிய விதி, 2019-இன்கீழ் அனைத்துத் தொழிலாளர்களும் சட்டரீதியாக குறைந்தபட்ச ஊதியம் மற்றும் உரிய நேரத்தில் ஊதிய விடுவிப்பு.
- xiii. சுய விருப்பத்தின் அடிப்படையில் 10-க்கும் குறைவான தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்கள் இஎஸ்ஐசி சலுகைகளைப் பெற விண்ணப்பிக்கலாம். ஆனால், அபாயகரமான தொழில்களில் ஒரு தொழிலாளி ஈடுபடுத் தப்பட்டிருந்தாலும் அந்த நிறுவனம் இஎஸ்ஐசி சலுகைகளுக்கு விண்ணப்பிப்பது கட்டாயம்.